செய்தி வெளியீடு எண்.91 நாள்.05.08.2021

**பத்திரிக்கை செய்தி**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி சென்னை மாவட்டம்**

**பள்ளிச் செல்லா குழந்தைகள், இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனுடைய குழந்தைகள் மற்றும் இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் கணக்கெடுக்கும் பணி 2021 –22**

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி சென்னை மாவட்டம் 2021–22 ஆம் ஆண்டில் 6 முதல் 19 வயதுடைய பள்ளிச் செல்லாக் குழந்தைகள், இடைநின்ற குழந்தைகள், இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் 1 முதல் 19 வயதுடைய மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் கணக்கெடுக்கும் பணி 10.08.2021 முதல் 31.08.2021 வரை நடைபெற உள்ளது.

கொரோனா பெருந்தொற்று (COVID–19) அரசு வழிகாட்டு முறைகளைப் பின்பற்றி (Standand and operating procedure ) குடியிருப்பு வாரியாக வீடு வீடாகச் சென்று (Door to Door Survey) கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்படும். கணக்கெடுப்பு பணியின் போது கோவிட் –19 பெருந்தொற்று காரணமாக பெற்றோர்களில் ஒருவரையோ அல்லது இருவரையும் இழந்த மாணவர்களின் விவரங்களும் சேகரிக்கப்பட உள்ளது.

இக்கணக்கெடுப்பு பணியில் மண்டல மேற்பார்வையாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பள்ளித் தலைமையாசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், சிறப்புப் பயிற்றுநர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கல்வித் தன்னார்வலர்கள், இயன்முறைப் பயிற்சியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பகல் நேரப் பாதுகாப்பு மையப் பாதுகாவலர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், தொடர்புடைய பிற துறை அலுவலர்கள் ஆகியோர்களால் நடத்தப்பட உள்ளது. குறிப்பாக தொழிற்சாலை, இரயில்நிலையம், பேருந்து நிலையம், கட்டிடப்பணி நடைபெறும் இடங்கள், மார்கெட் பகுதிகளில் கணக்கெடுப்பு நடத்தும் போது குழந்தை தொழிலாளர் நலத்துறை (Labour Department), Child Line, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புத் துறை (Social Defense) மற்றும் காவல் துறையுடன் இணைந்து Joint Raid முறையில் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

இக்கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட பள்ளிச் செல்லா குழந்தைகள், இடைநின்ற குழந்தைகள், இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகள் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009ன் படி அருகாமையில் உள்ள பள்ளிகளில் வயதுக்கேற்ற வகுப்புகளில் சேர்க்கப்படுவர். இவர்களில் பள்ளிச் செல்லா, இடைநின்ற, இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கற்றல் திறன் அடிப்படையில் இணைப்பு சிறப்பு பயிற்சி மையங்களில் (NRSTC) சேர்க்கப்பட்டு சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.

மாற்றுத்திறனாளி குழந்தைகள் உடல் நிலை மற்றும் கற்றல் திறனுக்கு ஏற்றார் போல் வீட்டுவழிக் கல்வி (Home Based Training), பள்ளி ஆயத்த பயிற்சி மையம் (School Readyness Programme ) முறையான பள்ளிகளில் (Regular School) சேர்க்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் அலைப்பேசி எண்களாகிய 9003267086, 7358281190 என்ற எண்களைத் தொடர்புக் கொள்ளலாம்.

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜெ.விஜயா ராணி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01